12-06-2024.
El.OP.No.36/2022

ம. சா. 2 ஜீவாநந்தம் அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டார்.

1 ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை :-

நான் மனுதாரரின் கணவர் என்றால் சரிதான். நான் வழக்கறிஞராக பணிபுரிகிறேன். இறந்துபோன வேலுச்சாமியின் தகப்பனார், பிள்ளைகள் எத்தனை பேர் என்ற விவரம் தெரியும். எல்லோரும் ஒரே தெருவில் வசிக்கிறோம் என்றால் சரிதான். வேலுச்சாமியின் அப்பா பெயர் சின்னத்தம்பி. சின்னத்தம்பிக்கு 5 மகன்கள், 2 மகள்கள். அவர்கள் பெயர் லட்சுமி, துர்க்கையம்மாள் ஆகும். சுப்ரமணி, பாலமுருகன், வேலுச்சாமி, சக்திவேல், கருப்புத்துரை ஆவார்கள். இவர்களில் வேலுச்சாமி இந்திய ராணுவத்தில் பணியாற்றி இறந்துவிட்டார். வேலுச்சாமியின் மனைவி பெயர் தேவகி. தேவி என்றும் அழைப்பார்கள். சக்திவேல் என்ற மகன் வேலுச்சாமியின் ஆவணங்களை பயன்படுத்தி தனது பெயர் வேலுச்சாமி என குடும்ப அட்டை, ஆதார் கார்டு, வாக்காளர் அடையாள அட்டை, பான் கார்டு போன்ற ஆவணங்களைப் பெற்று வாக்காளர் பெயர் பட்டியலில் தன்னுடைய புகைப்படத்தை மட்டும் வைத்து வேலுச்சாமி என்று பதிவு செய்துள்ளார். சக்திவேல் இப்படி வேலுச்சாமி என்று மோசடியாக தனது பெயரை பதிவு செய்த விவரம் தேர்தல் முடிவு அறிவிக்கப்படுவதற்கு முன்புதான் தெரியவந்தது. எமசாஆ.18 முதல் 34 ஆவணங்களை இறந்துபோன வேலுச்சாமியின் பெயரை மோசடியாக பயன்படுத்தி ஆவணங்களை பெற்றுள்ளார் என்றும் அவர் மீது நடவடிக்கை எடுக்க கேட்டேனா என்றால் 22.02.2022 ம் தேதி தேர்தல் முடிவு அறிவிக்கப்படுவதற்கு முன்பாகவே காலை 9.41 மணிக்கு நாங்கள் அனுப்பிய பதிவு தபாலில் நடவடிக்கை எடுக்கக்கோரி கேட்டுள்ளேன். வேலுச்சாமி தன் பெயரை போட்டு ஆதார் கார்டு, குடும்ப அட்டை வாங்கி 20 வருடங்களுக்கும் மேலாகிவிட்டது என்ற விவரம் நன்றாக எனக்கு தெரியும் என்றும், தற்போது தேர்தல் முடிவு அறிவிப்பதற்கு முன்புதான் தெரியவந்தது என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்களில் எந்த இடத்திலாவது சின்னத்தம்பி மகன் சக்திவேல் என்று காட்ட ஏதாவது ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை. ஏன் எனில் தனி நபர் ஆவணம் என்பதால் நான் கேட்டு கிடைக்காது, நீதிமன்ற அனுமதியின் பேரில் மட்டுமே கிடைக்கும். நான் விடுதலை சிறுத்தைகள் கட்சியில் பழனி ஒன்றிய செயலாளராக உள்ளேன். மோசடியாக வேலுச்சாமி தன் சகோதரன் பெயரை பயன்படுத்தி இப்படி மோசடி செய்ததற்கு காரணம் இறந்துபோன தனது சகோதரன் வேலுச்சாமியின் சொத்தை அபகரிப்பதற்காகத்தான் என்றால் இருக்கலாம். மற்றும் இன்ன பிற காரணங்களுக்காக. நான் விடுதலை சிறுத்தைகள் கட்சியில் இருப்பதால் என் மனைவிக்கு கட்சியில் சீட் கொடுத்தார்களா என்றால் இல்லை. என் மனைவியை எதிர்த்து போட்டியிட்ட எதிர்மனுதாரர் சரஸ்வதிக்குத் தான் விடுதலை சிறுத்தைகள் கட்சி சார்பாக சீட்

கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். நான் கட்சி தீர்மானத்திற்கு விரோதமாக என் மனைவியை நிறுத்தியதால் என்னை கட்சியிலிருந்து இடைநீக்கம் செய்தார்கள் என்றால் சரிதான். 2016 ம் வருடம் நடந்த உள்ளாட்சி தேர்தலில் நான்தான் எதிர்மனுதாரருக்கு முன்மொழிவு செய்தேன் என்றால் சரியாக நினைவில்லை. என்னிடம் காண்பிக்கப்படும் 2016 ம் வருடத்திற்கான தேர்தல் சம்மந்தமாக வேட்பாளர் அறிவிப்பில் வாக்காளர் பெயர் சரஸ்வதி என்றும், முன்மொழிந்தவர் பெயர் ஜீவாநந்தம் என்றும் உள்ளது என்றால் ஆவணத்தில் அவ்வாறு உள்ளது. ஆனால் எனக்கு சரியாக ஞாபகமில்லை. 2016 வேட்பாளர் பட்டியலில் 15 வரிசையில் வேலுச்சாமி என்பவர் பெயர் உள்ளது என்றால் சரிதான். மேலும் வாக்காளர் பட்டியலில் 15 லும், 70 லும் சின்னத்தம்பி மகன் வேலுச்சாமி என்று பெயர் உள்ளது என்று இரண்டு பேர் பெயரும் உள்ளது என்றும் சக்திவேல் என்ற பெயர் வாக்காளர் பட்டியலில் இல்லை என்றும் சொன்னால் இந்த வாக்காளர் பட்டியல் பற்றி எனக்கு எதுவும் தெரியாது. ஆனால் வாக்காளர் பட்டியலில் 1 ம் எதிர்மனுதாரரின் பெயரை முன்மொழிந்த சக்திவேல் என்பவர் தனது பெயர் வேலுச்சாமி என வேலுச்சாமியின் பெயரை சேர்ப்பதற்கு இறந்துபோன வேலுச்சாமியின் ஆதார் அட்டை, குடும்ப அட்டை, இன்னும் பிற ஆவணங்களை வைத்து தனது பெயர் வேலுச்சாமி என்று பொய்யாக பதிவு செய்துள்ளார். 2022 ம் வருட வாக்காளர் பட்டியலிலும் இதேபோல் இரண்டு வேலுச்சாமியின் பெயர்கள் உள்ளது என்றால் இறந்துபோன வேலுச்சாமியின் ஆவணங்களை பயன்படுத்தி சக்திவேல் என்பவர் தனது பெயர் வேலுச்சாமி என வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்த்த விவரம் அப்படியே தொடர்ச்சியாக வாக்காளர் பட்டியலில் பதிவாகி வந்துள்ளது. சக்திவேல்தான் ஆள்மாறாட்டம் செய்து வேலுச்சாமி என மாற்றிக்கொண்டார் என்பதற்கு ஆவணங்கள் உள்ளதா அல்லது சின்னத்தம்பி மகன் சக்திவேல் என்பதை நிரூபிக்க ஆவணங்கள் உள்ளதா என்றால் தாக்கல் செய்துள்ளேன்.

மேற்கொண்டு குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.

A MUTHUSARATHA

Digitally signed by A MUTHUSARATHA
Date: 2024.06.12 16:40:09 +0530

Principal District Judge,
Dindigul.